பக்கங்கள் 19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆனி 20 வெள்ளிக்கிழமை 04.07.2025 | அதிர்வு 334

## மூத்த ஊடகவியலாளர் கிருஷ்ணகுமார் மறைவு



கிளிநொச்சியைச் சேர்ந்த மூத்த ஊடகவிய லாளர் நடராசா கிருஷ்ண குமார் சுகயீனம் காரண மாக நேற்றுக் காலை 04



# செம்மணிப் புதைகுழியில் மேலும் 2 சிறுவர்களின் எலும்புக்கூடுகள்!

## நான்கு மண்டையோடுகளும் அடையாளம்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வின் போது சிறுவரின் என் புத் தொகுதி எனச் சந்தேகிக்கப் படும் இரண்டு என்புத் தொகுதி கள் அடையாளம் காணப்பட் டுள்ளன. இதன்மூலம் இந்தப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்டுள்ள மனித என்புத் தொகுதிகளின் மொத்த எண் ணிக்கை 40 ஆக உயர்வடைந் துள்ளது.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் எட்டாம் நாள் அகழ்வு நேற்று வியாழக் கிழமை இடம்பெற்றது. 04

# மனிதப் புதைகுழியின் புதிய பகுதியில் ஆடையை ஒத்த பொருள் அடையாளம்

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

மனிதப் புதைகுழி அடையாளம் காணப் பட்ட செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயா னத்தில் மேலும் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டு அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட புதிய பகுதியில் ஆடையை ஒத்ததாகக் காணப்படும் பொருள் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயா னத்தில் அடையாளம் காணப்பட்ட மனி தப் புதைகுழிக்கு அருகில் மேலும் புதை குழிகள் இருக்கலாம் 04






வடக்கில் தமிழ் மக்களின் காணிகளை கபளீகரம் பண்ணும் தேசிய மக்கள் சக்தி அரசின் முயற்சியை நீதிமன்ற நடவ டிக்கை மூலம் தமிழரசுக் கட்சி முடக்கியமை தேசிய மக்கள் சக்தியின் 'ஃபயர் பிராண்ட்' அமைச்சர் பிமல் இரத்நாயக் காவை சீற்றத்தில் ஆழ்த்தி யிருக்கின்றது.

இந்த முயற்சியை எடுத்த தமி ழரசுக் கட்சியை கிடைத்த இட மெல்லாம் அவர் வாங்குவாங் கென்று காட்டமாக வாங்கி வருகிறார்.

நல்லாட்சி அரசின் காலத்தில் பிரதமர் ரணிலோடு சேர்ந்து ஆளுந்தரப்பாக செயலபட்ட வர்கள் தமிழரசு கட்சியினர் என்று விமர்சிக்கும் அவர், அந்த நேரத் தில் அரசு தரப்புடன் 04

# நாடாளுமன்ற உறுப்பினரானார் முகம்மது சரிவு அப்துல் வாஸித்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினர் முகம்மது சாலி நழீம் சுய விருப்பின் அடிப்படையில் பதவியை இராஜினாமா செய்ததை தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் முகம்மது சரிவு அப்துல் வாஸித் நியமிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அரசியலமைப்பின் 99 (அ) உறுப்புரைக்கு அமைய பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட முகம்மது சாலி நழீம் சுய விருப்பத்தின் அடிப்படையில் பதவி விலகியதால் ஏற்பட்ட பதவி வெற்றிடத்துக்கு,1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் 64(5) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பத்தாவது நாடாளுமன்றத்தின் உறுப்பினராக முகம்மது சரிவு அப்துல் வாஸித் நியமிக்கப்படுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசியப் பட்டியல் உறுப்பினராக முகம்மது சாலி நழீம் 2024.12.03 ஆம் திகதியன்று பத்தாவது நாடாளுமன்றத்தின் உறுப்பினராக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவ்வாறான பின்னணியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து முகம்மது சாலி நழீம் 2025.03.14 ஆம் திகதியன்று பாராளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்வதாக உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் நகர சபைக்கான தலைவராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏறாவூர் அமைப்பாளரும்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான முகம்மது சாலி நழீம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முகம்மது சாலி நழீம் பதவி விலகியதை தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் முகம்மது சரிவு அப்துல் வாஸித்தின் பெயரை பரிந்துரைத்துள்ளார்.

இதற்கமையவாக பத்தாவது நாடாளுமன்றத்தின் உறுப்பினராக முகம்மது சரிவு அப்துல் வாஸித்தின் பெயரை குறிப்பிட்டு தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவித்தலை பிரசுரித்துள்ளது.

# நாட்டில் வருடாந்தம் 800 சிறுவர் புற்றுநோயாளர்கள் அடையாளம்




நாட்டில் வருடாந்தம் சுமார் 33,000 புதிய புற்றுநோய் நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதுடன், அவர்களில் 35 சதவீதமானோர் அதாவது 800 பேர் சிறுவர் புற்றுநோயாளர்கள் என அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மஹரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலையில் இந்திரா டிரேடர்ஸ் தனியார் நிறுவனத்தின் நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள சிறுவர் நோயாளர்களுக்கான ஐந்து மாடிக் கட்டடத்தின் அடிக்கல் நாட்டு விழா நேற்று வியாழக்கிழமை (3) சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றிய அமைச்சர்,


மருத்துவமனை கட்டுமானப்பணிகளால் சுகாதார அமைச்சு பல கடுமையான பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. சில கட்டிடநிர்மாண பணிகள் சுமார் 8 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் ஒரு சில காரணங்களால், அப்பணிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஆகையால் கட்டுமானப் பணிக்காக மதிப்பிடப்பட்ட தொகையை விட 50 முதல் 60 சதவீத பணத்தை மேலதிகமாக வழங்க வேண்டியுள்ளது. அத்துடன் நாட்டில் உள்ள குறிப்பிட்ட சில அரச நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றும் போதும் காலதாமதம் ஏற்படுகிறது.

ஆலோசனை மற்றும் பொறியியல் சேவைகளை வழங்குவதில் உள்ள சிக்கல்கள் மற்றும் ஒப்பந்த திட்டத்தில் உள்ள சிக்கல்கள் குறித்து ஜனாதிபதியும் கவனம் செலுத்தியுள்ளார். திறைசேரியிலிருந்து பணத்தை விடுவித்து குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டுமானப் பணிகள் இடம்பெற்றால் மாத்திரமே மதிப்பீட்டின்படி பணிகளை நிறைவு செய்ய முடியும்.

எதிர்வரும் காலங்களில் புதிய கட்டிட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது முதல் அத்திட்டம் முழுமை பெறும் வரையான காலம் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தப்படும்.நாட்டில் வருடாந்தம் சுமார் 33,000 புதிய புற்றுநோய் நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதுடன், அவர்களில் 35 சதவீதமானோர் அதாவது 800 பேர் சிறுவர் புற்றுநோயாளர்களாவர்.

அந்தவகையில் வருடாந்தம் மஹரகம தேசிய வைத்தியசாலையில் 11 ஆயிரம் புற்றுநோயாளர்கள் சிகிச்சைப் பெறுகின்றனர். புற்றுநோய் சிகிச்சைக்கான உபகரணங்களை வைத்தியசாலைகளுக்கு தொடர்ச்சியாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் அரசாங்கத்தால் மஹரகம புற்றுநோய் வைத்திய நாளைக்கு விரைவில் 5 புதிய லீனியர் ஆக்சிலேட்டர் இயந்திரங்கள் வழங்கப்பட உள்ளதுடன், ஆசிய அபிவிருத்தி வங்கியும் மருத்துவமனைக்கு மேலும் இரு லீனியர் ஆக்சிலேட்டர் இயந்திரங்களை வழங்க உள்ளது.

இதன் மூலம் நோயாளிகளுக்கான சிகிச்சை சேவைகள் மேலும் எளிதாக்கும். மஹரகம வைத்தியசாலையின் சமையலறையை ஒரு முன்னோடி திட்டத்தின் மூலம் தனியார் மருத்துவமனை சமையலறையின் நிலைக்கு மேம்படுத்தப்படும். நோயாளிக்கு ஏற்ற உணவுத் திட்டத்தை வழங்குவதற்குப் பதிலாக, நோயாளியின் தேவைகளுக்கு ஏற்ப சில மாற்றங்களுடனும் ஊட்டச்சத்து நிபுணர்களின் பங்களிப்புடனும் இந்த மருத்துவமனையில் ஒரு முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட உள்ளது – என்றார்.



# சுற்றியுள்ள கட்டடங்களால் சிகிரியா, காலி கோட்டை உலக பாரம்பரியத்திலிருந்து அகற்றப்படும் அபாயம்

சிகிரியா மற்றும் காலி கோட்டை ஆகியவற்றை அண்டிய பகுதிகளில் அதிகரித்து வரும் கட்டடங்களால் அவை உலக பாரம்பரிய சின்னங்களிலிருந்து அகற்றப்படும் அபாயம் எழுந்துள்ளதாக புத்தசாசன மற்றும் சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

உலகப் பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ அமைப்பின் அங்கீகாரம் பெற்றுள்ள கல்வெட்டுத் தொடர்பில் நேற்று வியாழக்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“1911 ஆம் ஆண்டு காலி பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மும்மொழிகளிலான கல்வெட்டு மற்றும் பாணந்துறை விவாதம் தொடர்பான விசேட எழுத்து மூல ஆவணங்களும் சமீபத்தில் யுனெஸ்கோ அமைப்பால் உலக பாரம்பரிய சின்னமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

மும்மொழி கல்வெட்டு தமிழ், சீன மற்றும் பாரசீக மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. அதில் சென்ஹி எனும் தளபதியால், பட்டுப்பாதை வழியாக வரும் சீன கப்பல்கள் பாதுகாப்பாக அதன் இலக்கை அடைய வேண்டும் என்ற நோக்கில் சிவனொளிபாதமலை இறைவனுக்கு நேர்த்தி செலுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை சிகிரியா மற்றும் காலி கோட்டை ஆகியவற்றை அண்டிய பகுதிகளில் அதிகரித்து வரும் கட்டடங்களால் அவை உலக பாரம்பரிய சின்னங்களிலிருந்து அகற்றப்படும் அபாயம் எழுந்துள்ளது. முறையற்ற விதத்தில் கட்டடங்களை கட்டுவதற்கு கடந்த காலங்களில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது அப்பகுதிகளில் பெருமளவான மக்கள் வசித்து வருகின்றனர்.

மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க தளமான சிகிரியா, இன்று வரை இலங்கையின் அதிசயங்களை உலகுக்குச் சொல்லும் சின்னமாக உள்ளது.

எனினும் தற்போது சிகிரியாவை சுற்றி சுமார் 124 கட்டடங்கள் உள்ளன. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் யுனெஸ்கோ அமைப்பினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து சிகிரியாவை அண்டிய பகுதிகளில் வசித்து வருபவர்களை அகற்றுவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காக 15 நிறுவனங்களை சேர்ந்த அதிகாரிகளை உள்ளடக்கிய விசேட குழு நியமக்கப்பட்டுள்ளதுடன், முறையான திட்டத்தைத் தயாரிப்பதன் மூலம் மக்களை அங்கிருந்து அகற்ற முடியும் என்ற நம்பிக்கையுள்ளது.” - என்றார்.



# போதைக்கு அடிமையான இளைஞர் உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

போதைப் பொருளுக்கு அடிமையான இளைஞர் ஒருவர் உயிருந்த சம்பவம் குப்பிளான் தெற்கு, பகுதியில் இடம்பெற்றுள்ளது.

திருநாவுக்கரசு சுஜீவன் (வயது 27) என்ற அதே இடத்தைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை நள்ளிரவு 11.09 மணியளவில் அவர் உயிரிழந்துள்ளார். இருவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு சென்றபோது அவர் மயங்கிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போதும் உயிரிழந்துள்ளார்.



இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை சுன்னாகம் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

சேர்ந்து காணிகளை தமிழரசு கட்சியி னரால் விடுவிக்க முடியாமல் போனது என்று கூறுகின்றமையுடன், இப்போது தாங்கள்தான் தமிழ் மக்களின் காணி களை விடுவித்து வருகிறார்கள் என்றும் குறிப்பிடுகிறார்.

அரசியல்வாதிகள் என்றாலே பழைய வற்றை மறந்து, புது கதை பேசுவது தான் வழமை போலும். அதைத்தான் அமைச் சர் பிமல் இரத்நாயக்கா செய்கிறார்.

இரண்டு விடயங்கள். ஒன்று – படை யினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளில் பெருமளவு யுத்தத்தின் பின்னர் விடு விக்கப்பட்டது நல்லாட்சி அரசின் காலத் தில்தான். வடக்கில் ஏறத்தாழ 3 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான காணி படை யினரின் பிடியிலிருந்து அக்காலப் பகுதி யில் விடுவிக்கப்பட்டிருக்கின்றது.

இப்போது சில மட்டுப்படுத்தல்களோடு சில வீதிகளை திறந்து விட்டமை மட்டும் தான் அமைச்சர் பிமல் இரத்நாயக்கா வின் அரசு செய்திருக்கும் சாதனை.

அடுத்தது – நல்லாட்சி காலத்தில் ஏதோ தமிழரசு (அப்போது தமிழ்க் கூட்ட மைப்பு) அரசாங்க பக்கம் இருந்த மாதி ரியும், தாங்கள் (ஜே.வி.பி.) மட்டுமே எதிர ணியில் இருந்த மாதிரியும் அவர் கூறுவது விநோதமானது.

அந்தக் சமயத்தில் தமிழரசுக் கட் சிக்கு 16 உறுப்பினர்கள் நாடாளுமன் றத்தில் இருந்தார்கள். ஜே.வி.பிக்கு 6 உறுப்பினர்கள் இருந்தார்கள். எதிரணி யில் அதிக உறுப்பினர்களை வைத் திருந்தமையினால் எதிர்க்கட்சித் தலை வர் பதவி தமிழரசின் தலைவர் சம்பந்த னுக்குக் கிடைத்தது. அதிக எண்ணிக்கை எம்.பிக்களை எதிரணியில் வைத்திருந்த தமிழரசுக்குத்தான் அப்போது எதிர்க் கட்சிகளின் கொரடா பதவியும் வழங்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால் எதிரணி யில் தங்களோடு சேர்ந்து ஜே.வி.பியினர் செயல்படுகின்றனர் என்ற புரிந்துணர் வில் எதிர்க்கட்சி கொறடா பதவியை தமி ழரசு அந்த சமயத்தில் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரான அநுரகுமார திஸநாயக்காவுக்கு விட்டுக் கொடுத்திருந்தது. அப்போது தமிழரசும் ஜே.வி.பியும் எதிரணியில் ஒன்றி ணைந்துதான் செய்யப்பட்டன.

உதாரணத்துக்கு அச்சமயத்தில்தான் சர்ச்சைக்குரிய காணாமல் போனவர் களுக்கான அலுவலகத்துக்கு வழி செய்யும் சட்டமூலம் நாடாளுமன்றுக்குக் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டமூலத்தை அப்போது அமைச் சர் மங்கள சமரவீர சமர்ப்பித்தார். அதை நிறைவேற்ற விடாமல் ஆளுந்தரப்பில் இருந்த ராஜபக்ஷக்கள் போன்றவர்கள் குழப்பிய நிலையில், மூன்றே மூன்று உறுப்பினர்களின் உரையோடு அந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. அந்த சட்டமூலத்தை ஆதரித்து பேசியவர்கள் அமைச்சர் மங்கள சமரவீர, தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் மற்றும் ஜே.வி.பி யின் தலைவர் அநுரகுமார திஸ நாயக்கா.

இவ்வாறு நல்லாட்சி சமயத்தில் தமி ழரசுக் கட்சியோடு ஒன்றிணைந்து ஜே.வி. பி. செயற்பட்டது.

இப்போது அரசியலுக்காக அவற்றை மறந்து வேறு விதமாக புரட்டிப் பேசுகிறார் பிமல் இரத்நாயக்கா. அவ்வளவுதான்.

**செம்மணிப் புதைகுழியில்...**

நேற்றைய அகழ்வின் போது சிறு வரின் என்புத் தொகுதி எனச் சந்தேகிக்





கப்படும் இரண்டு என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும் நான்கு மண்டையோடுகளும் இனங்காணப்பட்டுள்ளன. அதில் ஒன்று நேற்றுமுன்தினம் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. ஏனையவற்றை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 40 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற் றில் 34 என்புத் தொகுதிகள் முழுமை யாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன .

யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா வின் கண்காணிப்பில் துறைசார் நிபு ணரும் பேராசிரியருமான ராஜ் சோம தேவாவின் தலைமையில் அகழ்வுப் பணி கள் இடம்பெற்று வருகின்றன. காணா மல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணிகளான ஞா.ரனித்தா, வி.கே.நிரஞ்சன் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலை மையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**மனிதப் புதைகுழியின்...**

எனச் செய்மதிப் படங்கள் மூலம் சில பகுதிகள் சந்தேகத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டு தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினால் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருந்தது.

அந்தப் பகுதிகள் நீதிமன்ற உத்தரவுக் கமைய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபையின் பணியா ளர்களின் உதவியோடு அகழ்வுப் பணி கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகின.

இந்நிலையில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அகழ்வின்போது ஆடையை ஒத்ததாகக் காணப்படும் பொருள் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அதை அகழ்ந்து எடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

**மூத்த ஊடகவியலாளர்...**

காலமானார்.

அரவது இறுதி நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அக்கராயன்குளம், அணைக் கட்டு வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும்.

கிளிநொச்சியைச் சேர்ந்த நடராசா கிருஷ்ணகுமார் கடந்த 1999ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு இறுதிபோர் வரையும் 'புலிகளின் குரல்' வானொலி மற்றும் வர்த்தக சேவையான 'தமிழீழ வானொலி' ஆகியவற்றின் அலுவல கச் செய்தியாளராகவும், நிகழ்சிகள் பல வற்றுக்குக் குரல் வழங்குபவராகவும், பல்வேறு நெருக்கடிகள், விமானக் குண்டு வீச்சுக்கள், எறிகணை வீச்சுக்கள் என்பன வற்றுக்கு மத்தியில் துணிச்சல்மிகு ஊடகவியலாளராகவும் பணியாற்றிய வர்.

குறிப்பாக பல்வேறுபட்டவர்களு டைய உறவினையும் தொடர்புகளை யும் பேணிய நல்ல ஒரு செய்தித் தொடர் பாளராகவும் இருந்த இவர், 2010 ஆம் ஆண்டு முதல் 'தினக்குரல்', 'வலம்புரி', 'தினகரன்', 'தமிழ்மிரர்' உள்ளிட்ட ஊடகங்களிப் கிளிநொச்சி செய்தியா ளராகவும் பணியாற்றினார்.

நீண்ட காலம் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருந்த அவர் தனது 52 ஆவது வயதில் நேற்றுக் காலமா னார்.

## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# பிளாஸ்டிக் பாவனை

சூழலியல் பாதுகாப்புத் தொடர்பாக அரசு முக்கிய தீர்மானம் ஒன்றுக்கு வந்திருப்பதாகத் தெரிகின்றது.

மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய பிளாஸ்டிக் உணவுப் பெட்டிகள் மற்றும் தண்ணீர் போத்தல்கள் உள்ளிட்ட பொருள்களை சந்தைக்கு கொண்டு வருவதைத் தடுக்கக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்திருக்கின்றார்.

கடந்த காலங்களில் பிளாஸ்டிக் பொருள்கள் தொடர்பான சந்தை ஆய்வுகளில் ஆபத்தான நிலைமைகள் பற்றிய விவரங்கள் பதிவாகியுள்ளமையால், அடுத்த இரண்டு மாதங்களில் கடுமையான தீர்மானம் எடுக்கப்படும் எனவும், இது தொடர்பில் இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடப்படும் எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

நாட்டின் சிறுவர்களின் பாதுகாப்பிற்காகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

உலகளவில், அன்றாட பிளாஸ்டிக் பயன்பாடுகளால் ஏற்படும் பாதிப்புகள், குழந்தைகளிடையே புற்றுநோயை ஏற்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. உள்ளூர் சந்தையில் நடத்தப்பட்ட பரிசோதனைகள் இது தொடர்பாக அதிக ஆபத்துள்ள சூழ்நிலைகளைப் பதிவு செய்துள்ளன. ஆகையினால் இவ்விடயத்தில் இதுபோன்று, பல அமைச்சகங்களுடன் ஒருங்கிணைந்து, அடுத்த இரண்டு மாதங்களில் கடுமையான முடிவை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் சமரசிங்க கூறினார்.

பிளாஸ்டிக் பொருள்களை இறக்குமதி செய்பவர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு அவற்றின் பாதிப்புகள் குறித்து விளக்கமளிப்பது மட்டுமல்லாமல், குழந்தைகளுக்கு ஏற்படும் எதிர்மறையான தாக்கங்கள் மற்றும் அத்தகைய பொருள்களை உற்பத்தி செய்யும் போது பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்கள் குறித்தும் அவர்களுக்குத் தெரிவிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறுகின்றார்.

இந்த விவகாரம் குறித்து ஆராய ஒரு குழு நியமிக்கப்படும் என்றும், பிளாஸ்டிக் பொருள்கள் சம்பந்தமான துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் கவலைகள், ஆதங்கங்கள் மற்றும் பிரச்சினைகளை அந்தக் குழுவுடன் பகிர்ந்து கொள்ள ஊக்குவிக்கப்படுவர் எனவும் அமைச்சர் வசந்த சமரசிங்க கூறினார்.

குழுவின் அறிக்கையின் அடிப்படையில், நாட்டின் குழந்தைகளைப் பாதுகாக்க அதிகாரிகள் அதிகபட்ச நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

விஞ்ஞான ரீதியிலான ஆய்வுகளின் - முடிவுகளின் - அடிப்படையில் இத்தகைய கட்டுப்பாடுகள், தீர்மானங்கள், நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றமை தவிர்க்க முடியாதவைதான். அவை சரியானவைதான்.

ஆயினும், நீண்ட காலமாக இத்தகைய பொருள்களின் பாவனையில் மக்கள் பழகிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கான மாற்று வழிகளையும் அதேசமயம் சிந்திக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.









# அரச கரும மொழி வாரத்தை முன்னிட்டு வவுனியா செயலகத்தில் விசேட நிகழ்வு

(கி.வசந்தன்)

அரச கரும மொழி வாரத்தை முன்னிட்டு வவுனியாவில் பிரதி அமைச்சர் முனீர் முலபபரின் பங்கேற்புடன் விசேட நிகழ்வு ஒன்று வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர தலைமையில் இடம் பெற்றது.

அரசகரும மொழிகள் வாரத்தை முன்னிட்டு “மனதை வெல்லும் வழி மொழியாகும்” என்னும் தொனிப் பொருளில் நாடு முழுவதும் பொதுமக்கள் தினம் கொண்டாடபப்பட்டு வருகின்றது.

அதற்கமைவாக வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழ், சிங்கள, முஸ்லிம் கலாசாரத்தை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றமையுடன், தெரிவு செய்யப்பட்ட பாடசாலை நூலகங்களுக்கு நூல்கள் வழங்குதல், அரசகரும மொழிகள் வாரத்தை முன்னிட்டு இடம்பெற்ற சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கல், இரண்டாம் மொழிக் கற்கையை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கல் என்பன இடம்பெற்றன.

இந்நிகழ்வில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முலப்பர், யாழ் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் சாமிநாதன் விமல், அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகம், அரச அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.












# வவுனியா நகரில் ஞாயிற்றுக்கிழமை தோறும் தனியார் கல்வி நிலையங்களுக்கு விடுமுறை

## பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

(கி.வசந்தன்)

வவுனியா நகரில் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் என வவுனியா பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் வவுனியா பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதன்போது வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாபன் ஞாயிற்றுக்கிழமைகளில் அறநெறி வகுப்புக்களைக் கருத்தில் கொண்டு தனியார் கல்வி நிலையங்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் எனப் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர் எனத் தெரிவித்தார்.

இதன்போது, பதிலளித்த வவுனியா மாநகர சபை மேயர் சு.காண்டீபன், ஞாயிற்றுக் கிழமைகளில் தரம் 10 இற்கு கீழ் தனியார் கல்வி நிலையங்களை நடத்துவதற்குத் தடை விதித்து மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனை தாம் மாநகர எல்லைக்குள்நடைமுறைப்படுத்துவதாகத்தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, ஞாயிற்றுக் கிழமைகளில் தரம் 10 இற்கு கீழ் உள்ள மாணவர்களுக்கு தனியார் கல்வி நிலையத்தை நடத்த முடியாது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, வவுனியா மாநகர சபையில் கடந்த திங்கள் கிழமை இடம்பெற்ற சபை அமர்வில் ஞாயிற்றுக் கிழமைகளில் தரம் 10 மற்றும் அதன் கீழ் உள்ள மாணவர்களுக்கு தனியார் கல்வ நிலையங்களை நடத்த முடியாது என தீர்மானம் எட்டப்பட்டதுடன், 10 இற்கு மேற்பட்டமாணவர்கள்கற்கும்இடங்களில் மாணவிகள் மாற்றும் மாணவர்களுக்கான மலசல கூட வசதி, குடிதண்ணீர் வசதி என்பன இருக்க வேண்டும் எனவும், அதனை சுகாதார பரிசோதகர்கள் கண்காணிக்க வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வீதியில் கண்டெடுத்த பணப்பையை உரியவரிடமே ஒப்படைத்த கல்முனை மாநகர சபையின் ஊழியர்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

தன்னால் கண்டெடுக்கப்பட்ட பணப்பை (மணிப் பேர்ஸ்) ஒன்றை கல்முனை மாநகர சபை ஊழியர் ஒருவர், உரிய நபரிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று கல்முனைப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கல்முனை மாநகர சபை ஊழியரின் இந்த முன்மாதிரியான செயற்பாட்டை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

கல்முனை மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் சேவை மேற்பார்வையாளரான எம்.எம்.எம். நிஸ்வான் நேற்றுவியாழக்கிழமை கல்முனை ஸாஹிறாக் கல்லூரி வீதியில் கடமை நிமித்தம் சென்று கொண்டிருந்த போது, பெண்கள் பயன்படுத்தும் மணிப் பேர்ஸ் ஒன்று வீதியில் கிடப்பதைக் கண்டெடுத்து, உடனடியாக மாநகர சபைக்கு விரைந்து, மாநகர ஆணையாளரிடம் அதனை ஒப்படைத்துள்ளார்.

அதையடுத்து, அந்தப் பணப்பைக்குரிய குடும்பப் பெண், மாநகர ஆணையாளரின் அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு, மாநகர சபை ஊழியரான எம்.எம்.எம். நிஸ்வானின் கரங்களினாலேயே அதனை கையளிக்கச் செய்தார் ஆணையாளர்.

சாய்ந்தமருது ஒஸ்மன் வீதியைச் சேர்ந்த இப்பெண், பொருள்களை கொள்வனவு செய்வதற்காக ஒரு தொகைப் பணத்தையும் கைத்தொலைபேசியையும் இந்தப் பையில் வைத்து எடுத்துச் சென்றார் என்சவும் அதனுள் தேசிய அடையாள அட்டை மற்றும் வங்கி கணக்குப் புத்தகம் என்பனவும் இருந்தன எனவும் அது தவறிக் காணாமல் போய், தேடிக் கொண்டிருந்த நிலையிலேயே தகவல் தரப்பட்டு, மாநகர சபை காரியாலயத்திற்கு வந்தார் எனவும் குறிப்பிட்டார்.



தனது பணப்பையை மீட்டுத்தந்த ஊழியருக்கு ஆனந்தக் கண்ணீருடன் அவர் நன்றியைத் தெரிவித்துக் கொண்டமையுடன் அந்த ஊழியருக்கு அன்பளிப்பு வழங்கவும் முற்பட்டார். எனினும் அந்த ஊழியர் அதனைப் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டார்.

சில வருடங்களுக்கு முன்னர் இந்த மேற்பார்வையாளரான எம்.எம்.எம். நிஸ்வான், தங்க ஆபரணங்கள் மற்றும் பெருந்தொகைப் பணம் அடங்கிய பொதியொன்றைக் கண்டெடுத்து, உரிய குடும்பத்தினரிடம் ஒப்படைத்தமைக்காக மாநகர சபை நிர்வாகத்தினரால் விஷேட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தார் என்பதும் அது பி.பி.சி. உலக செய்திச் சேவையின் கவனத்தை ஈர்த்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நேர்மையான ஊழியர்கள் தமது மாநகர சபையில் இருப்பதையிட்டு பெருமிதமடைகின்றார் எனக் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி மகிழ்ச்சி தெரிவித்தார்.

# முதலாம் தரத்திற்கு மாணவர்களை உள்வாங்கும் வர்த்தமானி வெளியீடு



2026 ஆம் ஆண்டில் பாடசாலைகளில் முதலாம் வகுப்பிற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பம் மற்றும் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி விண்ணப்பங்கள் அனைத்தும் தேவையான ஆவணங்களுடன் பதிவு செய்யப்பட்ட அஞ்சல் மூலம், சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்க முடியும்.

2025 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி வரை அதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.





ஜெனரல் லயனல் பலகல்ல

# கால் நூற்றாண்டுக்கு முந்திய கதை....!

**செம்மணி மனிதப் புதைகுழி குறித்து மக்கள் அதிகம் பேசும் - கவனிக்கும் - காலமிது.**

**சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்னர் செம்மணியில் மாணவி கிருஷாந்தி குமாரசுவாமியும் குடும்பத்தவர்களும் கொன்று புதைக்கப்பட்ட புதைகுழி மற்றும் முன்னைய மனிதப் புதைகுழி போன்றவை அகழப்பட்ட சமயம் பக்கத்தில் இருந்து, செய்தி சேகரித்து, யாழ்ப்பாண மக்களுக்கும், பி.பி.ஸி. தமிழ்ச் சேவை நேயர்களுக்கும் அந்தச் செய்திகளை துணிச்சலுடன் வழங்கிய ஊடகவியலாளன் நான்.**

**இந்த விடயம் பற்றிய என்னுடைய அனுபவங்களை 11 ஆண்டுகளுக்கு முன்னர் நான் எழுதி வெளியிட்ட 'என் எழுத்தாயுதம்' நூலில் ஆங்காங்கே பிரஸ்தாபித்திருந்தேன்.**

**சுமார் 550 பக்கங்கள் கொண்ட அந்த புத்தகத்தில் அச்சமயத்தில் 1990 களின் பிற்பகுதியில் யாழ்குடா நாடு இராணுவத்தினரின் கைகளுக்குள் வந்த பின்னர் வகை தொகையின்றி தமிழ் மக்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் அந்தப் புத்தகத்தில் நான் எழுதிய ஏழு, எட்டு பக்கங்களை இன்று இப்பகுதியில் அப்படியே மீள் பிரசுரம் செய்கிறேன். அந்தக் காலகட்டத்தில் நிலவிய சில விடயங்களை இந்தப் பக்கங்கள் வாசகர்களுக்கு உணர்த்தக் கூடும் என்று நினைக்கிறேன்.**

**என்னுடைய அந்தப் புத்தகம் அந்த காலகட்டத்தின் ஒரு தரிசனமாக அமைந்திருக்கும் என்றும் கருதுகிறேன். இப்போது விற்பனைக்கு அல்லது அச்சில் அந்த புத்தகம் இல்லாவிட்டாலும் அடுத்த ஓரிரு மாதங்களில் அதன் அடுத்த பதிப்பை வாசகர்கள் பெறக்கூடியதாக இருக்கும்.**

**இப்போது அந்தப் புத்தகத்தில் சில பக்கங்களில் வந்த விடயங்களை வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.**

**- ந.வித்தியாதரன் -**

யாழ்.குடாநாட்டை 1996 முற்பகுதியில் படையினர் முற்றாக மீட்ட காலப்பகுதியை ஒட்டி யாழ். குடாநாட்டில் யாழ். நகரப் பகுதியிலும் வலிகாமத்தின் பிற முக்கிய பிரதேசங்களிலும் இலங்கை இராணுவத்தின் 51 ஆவது டிவிஷன் படையணியே நிலைகொண்டிருந்தது. அதன் 2 ஆவது பிரிகேட் –அதாவது 512 ஆவது பிரிகேட் – யாழ். நகரப் பகுதியை மையமாக வைத்துச் செயற்பட்டது. முழு 51 ஆவது டிவிஷனினதும் கட்டளைத் தலைமையகம் அச்செழுவில் செயற்பட்டது. 1996 காலப்பகுதியில் அந்த டிவிஷனின் பொதுக் கட்டளை அதிகாரியாக ஜெனரல் ஜானக பெரேரா செயற்பட்டார். இராணுவத்தில் மிகக் கடுமையானவராகவும் ஈழத்தமிழர்களால் மிகக் கொடூரமானவராகவும் அவர் நோக்கப்பட்டார்.

அச்சமயத்தில்தான் குடாநாட்டில் தினசரி இரவோடு இரவாகப் பல இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு அல்லது கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யும் அவலம் பெருங் கொடூரமாக அரங்கேறிக் கொண்டிருந்தது. வகைதொகையின்றி – கேட்டுக் கேள்வியின்றி – தொடர்ந்த இந்தப் பேரவலத்தில் சிக்குண்ட பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பின்னர் என்னவானார்கள் என்பது இன்றுவரை தெரியாத மர்மமாகவே நீடிக்கின்றது. பெரும்பாலும் அகன்று, பரந்து, விரிந்து கிடக்கும் செம்மணித் தரவையில் மண்ணுக்குள் மண்ணாக அவர்கள் புதையுண்டு மக்கிப் போயிருக்கலாம் என்று பொதுவாகக் கருதப்படுகின்றது. ஜெனரல் ஜானக பெரேரா 51 ஆவது டிவிஷனின் பொதுக்கட்டளைத் தளபதியாக இருந்த சமயத்தில் இடம்பெற்ற இந்தக் கொடூரங்கள் குறித்து வெளிப்படையாக உதயனில் விமர்சிக்கப்போய், அச்செழுவுக்கு அழைக்கப்பட்டு, ஜெனரல் ஜானகப் பெரேராவிடம் கெட்ட வார்த்தைகளால் அர்ச்சனை வாங்கிக் கட்டிக் கொண்ட அவல அனுபவமும் எனக்குண்டு.

இந்தச் சமயத்தில்தான் 51ஆவது டிவிஷனின் புதிய பொதுக்கட்டளைத் தளபதியாக வந்தார் ஜெனரல் லயனல் பலகல்ல. அவருக்குப் பின்னர் அந்தப் பதவிக்கு வந்தவர் ஜெனரல் சாந்த கோட்டேகொட. எவ்வாறு இவர்கள் இருவரும் அடுத்தடுத்து 51 ஆவது டிவிஷனின் பொதுக்கட்டளைத் தளபதிகளாக வந்தார்களோ அதே போன்று அடுத்தடுத்து இலங்கையின் இராணுவத் தளபதிகளாகவும் அவர்கள் பதவி வகித்தனர். இந்த இரண்டு பதவிகளிலும் மற்றும் வடக்குப் படைகளின் தளபதிகளாகவும் அவர்கள் இருவரும் பணியாற்றியசமயங்களிலும் ஒரு பத்திரிகை ஆசிரியன் என்ற முறையில் இருவருடனுமே மிகவும் நெருங்கி ஊடாடிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

ஜெனரல் பலகல்ல 51ஆவது டிவிஷனின் கட்டளைத் தளபதிப் பொறுப்பை ஏற்ற அன்று அவர் முதல் செய்த காரியம் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த ஒரேயொரு பத்திரிகையான உதயனின் ஆசிரியரான என்னை அன்று மாலை கூப்பிட்டு உரையாடி, ஆலோசனை கலந்ததுதான்.

தொடர்ச்சி▼



ஜெனரல் ஜானக பெரேரா

# கால் நூற்றாண்டுக்கு முந்திய கதை....!

தொடர்ச்சி▲

யாழ். நகரத்தில் உள்ள 512 ஆவது பிரிகேட்டில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. அந்தச் சந்திப்பின் போது யாழ். நகரப் படைத்தளபதி உட்பட பிரிகேடியர்கள், கேணல்கள் என ஏழெட்டு அதிகாரிகள் ஜெனரல் பலகல்லவுடன் உடனிருந்தனர். ஆனால் அவர்கள் எல்லாம் சீருடையில் இருந்தனர். ஜெனரல் பலகல்ல மட்டும் சிவில் உடையில் வந்திருந்தார். அச்சமயத்தில் இந்த இராணுவத் தர நிலைகள் குறித்து எனக்கு வலுவான அறிவு இருக்கவில்லை. இவர் கேணல், இவர் பிரிகேடியர், இவர் ஜெனரல் என்றெல்லாம் அறிமுகப்படுத்தினார்கள். ஆனால் கேணல் உயர்தரமா, பிரிகேடியர் உயர்தரமா, ஜெனரல் உயர் தரநிலையா, எந்தப் பதவிக்கு எந்தச் சீருடை இருக்கும், எத்தனை நட்சத்திரங்கள் சீருடையில் காணப்படும் என்ற விடயங்கள் எல்லாம் எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை.

எனக்கு முன்னால் இருந்த மேசையில் லயனல் பலகல்ல என்ற புதிய அதிகாரி சிவில் உடையில் இருந்தார். ஏனையோர் எல்லாம் சீருடையில் விறைப்பாக இருந்தனர். அந்தச் சூழலில் சிவிலுடையில் இருக்கும் அதிகாரியோடு மனம் விட்டுப் பேசலாம் போல என்ற எண்ணவோட்டமே எனக்குள் ஏற்பட்டது. போதாக் குறைக்கு சிவில் உடையில் இருந்த பலகல்ல தோற்றத்தில் எனது அப்பாவைப் போல மென்மையானவராகவும் காணப்பட்டார். எனவே சீருடையில் விறைப்பாகக் காணப்படும் இந்த அதிகாரிகளை விடுத்து, இந்தச் சிவில் உடை அதிகாரியுடன் நெருங்கி உரையாடுவோம் என்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. ஜெனரல் லயனல் பலகல்ல என்ற பெயரை ஏற்கனவே கொழும்புப் பத்திரிகைகளில் மேலோட்டமாக வாசித்த ஞாபகம் எனக்கு இருந்தது. முன்னர் அப்பதவியில் இருந்த ஜெனரல் ஜானக பெரேரா போல லயனல் பலகல்லவும் மிகச்சூடானவராக, இறுக்கமானவராக,கொடூரமானவராகஇருக்கக்கூடும் என்ற கற்பனை ஏற்கனவே எனது மனதில் ஓடியிருந்தது. இந்தப் பின்புலத்தில்தான் அந்தச் சந்திப்பு இடம்பெற்றது. அறிமுகப்படலம் முடிந்ததும் ஜெனரல் பலகல்ல தாமாகவே பேச்சை ஆரம்பித்தார்.

"புதிதாக இந்தப் பதவிக்கு வந்திருக்கும் என்னைப் பற்றி யாழ்ப்பாண மக்கள் என்ன நினைக்கின்றார்கள்... ? என்ன எதிர்பார்க்கிறார்கள்.... ?" – என்று கேட்டார் அவர். சிவில் உடையில் எனது அப்பா போல காட்சி தந்த அவர் குறித்து எனது மனதில் அச்சம் ஏதுமிருக்கவில்லை. அக்கேள்வியை ஜெனரல் ஜானக பெரேரா போன்றோர் தங்களுக்கேயுரிய கடுமையான குரலில் கேட்டிருந்தால் எனது பதில் வேறு விதமாக இருந்திருக்கும். ஆனால் மிக மென்மையான குரலில், அரவணைக்கும் தொனியில், ஜெனரல் பலகல்ல இந்தக் கேள்வியைக் கேட்டதும் என்னையறியாமலேயே துடுக்குத்தனமான பதில் என் வாயிலிருந்து வந்தது.

"ஜே.வி.பியினரைத் தீவிரமாக அழித்தொழித்து விட்டு அந்த இரத்தக்கறை படிந்த கைகளோடு நீங்கள் இங்கு வந்திருக்கின்றீர்களோ என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் உள்ளது. அதைத்தான் இங்கும் நீங்கள் தொடரப்போகின்றீர்களோ என்ற அச்சமும் எமது மக்களுக்கு உண்டு. " – என்றேன் நான் என்னை அறியாமலேயே.

ஜெனரல் பலகல்லவுக்கு பக்கத்திலிருந்த ஏனைய அதிகாரிகள் எல்லோரும் திடுக்கிட்டுப் போயினர். இப்படி ஒரு பதிலை தனி ஒருத்தனாக, பிரதான இராணுவ முகாமின் மையத்தில் வந்து நின்று கொண்டு ஓர் இடைத்தர வயதுச் சிவிலியன் ஆணி அடித்தாற்போல கூறுவான் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்தான். அவர்களின் முகத்தில் ஏற்பட்ட கலவரம் – முகக்குறிப்பு மாற்றம் – இன்றும் எனது மனதில் நிழலாடுகிறது. எதிர்பாராத இந்தப் பதிலைக் கேட்டதும் ஜெனரல் பலகல்ல ஒரு கணம் அதிர்ந்து போனாராயினும் அடுத்த கணத்தில் அவர் தம்மைச் சுதாகரித்துக்கொண்டார். தாம் வசமாக – விசேட கவனமெடுத்து – கையாளவேண்டிய ஒரு தமிழ் ஊடகவியலாளர் தம்மிடம் சிக்கிக் கொண்டிருக்கின்றார் என்று அவர் கருதினாரோ என்னவோ தெரியவில்லை. தமது முகக் குறிப்பால் மற்றைய அதிகாரிகளை அமைதி பேண அவர் பணித்தார் என்பதை

தொடர்ச்சி▼



ஜெனரல் சாந்த கோட்டேகொட

# கால் நூற்றாண்டுக்கு முந்திய கதை....!

தொடர்ச்சி▲

உணர்ந்துகொண்டேன். அடுத்து தமது மென்மையான குரலில் – அமைதியான குரலில் – அவர் பதில் கூறத்தொடங்கினார்.

"நோ.... புத்தா...! (இல்லை மகனே..!) நான் அப்படிப் பட்டவன் அல்லன்..." – என்று அவர் பதிலளிக்கத் தொடங்கியதும் நான் விறைத்துப்போனேன்.

அத்தகைய குற்றச்சாட்டை நான் முன்வைத்த பின்னரும் கூட, அதைப் பொருட்படுத்தாமல் "மகனே" என்று அழைத்து என்னை அரவணைக்கின்றமை போல் அவர் அளித்த பதில் எனது நெஞ்சைத் தொட்டது. அப்போது தொடங்கிய எமது புரிந்துணர்வு அவர் இராணுவத் தளபதி பதவி வகித்து ஓய்வு பெறும் வரை தொடர்ந்தது என்பேன். இப்போது கூட இந்தத் தள்ளாத வயதில் உள்ள அவர் என்னைச் சந்திப்பராயின் அதே ஆத்மார்த்தமான நட்புறவு எமக்குள் இருக்கும் என்றே நம்புகிறேன்.

"மகனே...! எனக்கும் அந்தக் கொடூரங்களுக்கும் எந்த நேரடிச் சம்பந்தமும் இல்லை. இப்போது இங்கும் கூட நீங்களும் எத்தகைய பேரவலத்துக்குள் சிக்கியிருக்கின்றீர்கள் என்ற யதார்த்தம் எனக்குத் தெரியும். அத்தகைய நெருக்கடியிலிருந்து உங்களையும், எங்களையும், நாட்டையும் நேர்மைத் திறனுடன் மீட்கும் ஒரு நல்ல பணியை முன்னெடுக்கும் திறந்த எண்ணத்துடனேயே நான் இங்கு வந்துள்ளேன். அதற்கு உங்களைப் போன்று வெளிப்படையாகப் பேசும் தரப்பினரின் ஆதரவு எனக்கு வேண்டும். நான் நேர்மையாகவும் விசுவாசமாகவும் உண்மையாகவும் இங்கு பணியாற்றுவேன். இன்று என் மீது இத்தகைய சந்தேகக் குற்றச்சாட்டை நீங்கள் முன்வைத்தமை நல்லதற்கே. இங்கு எனது சேவையைப் பூர்த்தி செய்து நான் வெளியேறும்போது, இதே குற்றச்சாட்டை முன்வைத்த உங்களின் வாயிலிருந்து நான் நேர்மையாகவும் உண்மையாகவும் நல்ல எண்ணத்துடனும் இங்கு பணியாற்றினேன் என்ற சான்றைப் பெற்றுக்கொண்டுதான் வெளியேறுவேன்"– என்று தீவிர உறுதியுடன் கூறினார் அவர்.

தேநீர், பிஸ்கெட்டுகளுடன் அந்தச் சந்திப்பு முடிந்தது. அடுத்த நாள் தம்மை அச்செழுவில் உள்ள டிவிஷன் தலைமையகத்தில் வந்து சந்திக்குமாறு அவர் கோரினார். நான் சம்மதித்துவிட்டு வெளியேறினேன்.

அடுத்த நாள் அவரை அச்செழுவில் சந்தித்தேன். அந்தச் சந்திப்பில் நாங்கள் இரண்டு பேர் மட்டுமே.

நான் யாழ். குடாநாட்டு மக்களின் உடனடிப் பேரவல நிலையான இளைஞர்கள் கைதாகிக் காணாமல் போகும் விவகாரத்தை அவருக்கு விளங்கப்படுத்தினேன். நள்ளிரவில் ஊரடங்கு நேரத்தில் திடீரென பல வாகனங்களில் முகத்தை மூடிக் கட்டிக் கொண்டு சீருடையில் வந்து இறங்குவார்கள். மின்சார விநியோகம் ஒழுங்கில்லாத அந்தச் சமயத்தில் கும்மிருட்டில் டோர்ச்சுகளுடன் வீடுகளுக்குள் புகும் சீருடையினர் அங்கிருக்கும் இளைஞர்களைப் பெயர் சொல்லி அழைத்து இழுத்துச் செல்வர். சில சமயங்களில் முகமூடி அணிவித்துத் தாம் கூட்டிவரும் தலையாட்டிகளின் முன்னிலையில் வீட்டிலிருப்பவர்களை நிறுத்தி அவர்களில் யார், யாரைத் தலையாட்டிகள் அடையாளப்படுத்துகின்றார்களோ அவர்களைக் கூட்டிச் செல்வர். தாங்கள் எங்கிருந்து வந்தார்கள், வீட்டிலிருப்பவரை எங்கு கூட்டிச்செல்கின்றார்கள், அவர்கள் குறித்து எங்கே விசாரித்து அறியலாம் என்பன குறித்தெல்லாம் ஏதும் தெரிவிக்காமலேயே அவர்கள் புறப்பட்டுச் சென்றுவிடுவர்.

ஊரடங்கு வேளையாதலால் வீட்டிலிருப்பர்களால் ஏதும் செய்யமுடியாது. அச்சமயத்தில் கைத்தொலைபேசி வசதிகளும் இருக்கவில்லை. சாதாரண வீடுகளுக்கு நிலையான தொலைபேசி வசதிகளும் வழங்கப்படவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறும் வீட்டுக்காரர்கள் விடிந்ததும் – ஊரடங்கு நீக்கப்பட்டதும் – குய்யோ முறையோ என்று குளறிக் கொண்டு அருகில் உள்ள படைமுகாமுக்கோ அல்லது படையினரின் சிவில் நிர்வாக அலுவலகத்துக்கோ ஓடுவார்கள். ஆனால் அங்கிருக்கும் படையினரோ கையை விரித்து விடுவார்கள். அவர்களுக்கும் வேறு வழி இருக்காது. நள்ளிரவில் வந்தோர் சம்பந்தப்பட்டவரை எங்கு கொண்டு சென்றார்கள் என்பதைத் தெரியாமல் அவர்கள் என்ன கூற முடியும்....?

இப்படி தினசரி குடாநாடு எங்கும் பரவலாக அரங்கேறும் பயங்கரத்தை நான் ஜெனரல் பலகல்லவுக்கு விளங்கப்படுத்தினேன். இவ்வாறு காணாமற் போவோர் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில்தினசரிஐந்துக்கும்குறையாதமுறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

பயங்கரவாதத்தைத் தடுக்கிறோம் என்ற பெயரில் நீங்கள் சந்தேகநபர்களைக் கைதுசெய்வது தவறல்ல. ஆனால் அதுவும் ஒருவகைக் கொடூரப் பயங்கரவாதமாக அரங்கேறுவதுதான் மிகவும் தப்பு என்று இராணுவ அதிகாரிக்கு இராணுவ வார்த்தைகளிலேயே நான் விளங்கப்படுத்தினேன். யாரைக் கைது செய்வதானாலும் அதனைச் சட்டரீதியாகச் செய்யுங்கள், சம்பந்தப்பட்ட நபரைக் கைது செய்பவர் யார், அவரை எங்கே கொண்டு செல்கிறீர்கள்

தொடர்ச்சி▼



செம்மணி புதைகுழி தோண்டும் நடவடிக்கையின்போது செம்மணித் தரவையில். நீதிவான் அருள்சாகரன், ஊடகவியலாளர் சிவகணேசன், ஐ.நா. அகதிகள் தூதரக அலுவலர் பாலகிருஷ்ணன் ஆகியோருடன் நான்...

# கால் நூற்றாண்டுக்கு முந்திய கதை....!

தொடர்ச்சி▲

என்பவற்றை உறவினர்களுக்கு உரிய முறையில் தெரிவித்துவிட்டுக் கொண்டு செல்லுங்கள். பயங்கர வாதத்தை முறியடிக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு பயங்கரவாதத்தை நீங்களே செய்தால் அதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? – என்று கேட்டேன் நான்.

அவர் எனது வாதத்தை அமைதியாகச் செவி மடுத்தார். இந்தப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணக்கூடிய நடவடிக்கைகளைத் தாம் எடுப்பார் என அவர் எனக்கு உறுதியளித்தார். மேலும் பல விடயங்களைப் பேசிவிட்டு அச்செழுவிலிருந்து நான் புறப்பட்டேன்.

இரண்டு, மூன்று நாள்கள் கழிந்தன. அச்செழுவில் உள்ள 51ஆவது டிவிஷன் தலைமையகத்தில் இருந்து ஓர் அறிக்கை பிரசுரத்துக்கு வந்திருந்தது. ஜெனரல் பலகல்ல உரிய நடவடிக்கை எடுக்கத் தொடங்கியி ருக்கின்றார் என்ற நம்பிக்கை எனக்குப் பிறந்தது. அந்த அறிக்கையின் சாராம்சம் இதுதான்:-

51ஆவது டிவிஷனுக்கு உட்பட்ட பகுதிகளில் இனி படையினர் ஏதேனும் கைது நடவடிக்கை களில் ஈடுபடுவதாயின் அது தொடர்பில் கடுமையான நடைமுறைகள் பின்பற்றப்படும்.

(I) கைதுசெய்யப்படுபவர் தொடர்பான ரசீது கைது செய்யும் அதிகாரியினால் சம்பந்தப்பட்ட சந்தேக நபரின் உறவினர்களுக்கு வழங்கப்பட வேண்டும். கைது செய்யும் அதிகாரியின் தர நிலை, பதவி, முகாம் போன்ற விவரங்கள் அதில் குறிப்பிடப்படவேண்டும்.

(II) எந்தப் பகுதியில் கைது இடம்பெற்றாலும், அந்தப் பகுதிக்குப் பொறுப்பான படைப்பிரிவினரின் முன் அனுமதியுடன் மட்டுமே அத்தகைய கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(III) தமது பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் எந்தப் படைப் பிரிவினரால் யார் கைது செய்யப்பட்டாலும் அதற்கு அந்தப் பிரதேசத்துக்குரிய படை அதிகாரியே முழுப் பொறுப்பாவார். தமது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பகுதியில் வேறு படைப் பிரிவினர் கைதுகளை மேற் கொண்டாலும் அந்தப் பொறுப்பிலிருந்து அவர் விலகிக் கொள்ளமுடியாது.

– இத்தகைய சாரப்பட்ட விதிமுறைகள் அதில் இடம்பெற்றிருந்தன என்று ஞாபகம்.

எழுத்தில் இந்த விதிமுறைகள் வந்தாலும் அவை நடைமுறைப்படுத்தப்படுமா என்பது தொடர்பில் எனக்கு சந்தேகமே நிலவியது. ஆனாலும் ஒரு பிர தேசத்தில் யார் வந்த. கைதுகளை மேற்கொண்டா லும் அந்தப் பிரதேசத்துக்குப் பொறுப்பான படை அதி காரியே அதற்கு வகை சொல்லியாக வேண்டும் என்ற உத்தரவு முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டால் இந்த முயற்சி ஓரளவேனும் வெற்றி பெற வாய்ப்புண்டு என நான் கருதினேன். அதனைத் தொலைபேசி மூலம் ஜெனரல் பலகல்லவுக்கும் நான் தெரியப்படுத் தினேன். தான் அதில் மிக உறுதியாகவும் கடுமையா கவும் இருப்பார் என்பதை கீழ் மட்ட அதிகாரிகளுக்குத் தாம் தெரியப்படுத்தி உள்ளார் என்றும், வெளிப் பகுதிப் படையினர் தங்கள் பகுதியில் வந்து தங்களுக் குத் தெரியாமல் மேற்கொள்ளும் கைதுகளினால் தங்களுக்கும் பிரச்சினை வரும் எனக் கருதி இனி மேல் சம்பந்தப்பட்டோர் விழிப்பாக இருப்பார்கள் என்றும் கூறினார் ஜெனரல் பலகல்ல. குறைந்த பட்சம் படை மேலிடத்துக்காவது தாங்கள் பொறுப்புக் கூறவேண்டும் என்பதற்கான பொறிமுறையை படை அதிகாரிகளுக்குத் தாம் விதித்திருப்பதால் இம்முயற்சி வெற்றி பெறும் என்றார் அவர்.

சுமார் ஒரு வாரம் கடந்திருக்கும். மீண்டும் ஜெனரல் பலகல்ல எனக்குத் தொலை பேசி அழைப்பு எடுத்தார்.

"மீஸ்டர் வித்தியாதரன்...! மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பாருங்கள். எங்களது பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதியில் காணாமற்போனோர் பற்றிய முறைப்பாடு இப்போது பூச்சியத்துக்கு வந்து விட்டது" – என்றார் அவர்.

ஆள்கள் கைதாகிக் காணாமற்போதல் தொடர்பான பிரச்சினை அன்றோடு முற்றுப்பெற்றுவிட்டது என்று நான் குறிப்பிடமாட்டேன். ஆனால் 1996 இல் யாழ். குடாநாட்டைப் படையினர் முற்றாகக் கைப்பற்றிய மையை அடுத்து மிக மோசமாக – மிகத் தீவி ரமாக – இடம்பெற்ற கைதாகிக் காணாமற்போ கும் பிரச்சினை அன்றைய காலகட்டத்தில் மிகப் பெருமளவில் வீழ்ச்சி கண்டது என்றே கூறுவேன்.

புதிய மிலேனியம் ஆரம்பமாகி மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில், ரணில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் பயனின்றிச் செயலிழந்த பின்னர் வெடித்த கடும் யுத்தத்தைத் தொடர்ந்து 2009 வரை நீடித்த மோசமான இனப் பூசலின்போது பல்லாயிரம் பேர் வெள்ளை வானில் வந்தோராலும் பிற வகைகளிலும் கடத்தப்பட்டு அல்லது கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் போன விவகாரம் அடுத்த கட்ட அத்தியாயமாகப் பின்னர் இடம்பெற்றது என்று கூறலாம்.

எனினும் அன்றைய காலகட்டத்தில் – 1990களின் பிற்பகுதியில் – யாழ். குடாநாட்டில் பெரும் பயங்கர மாக உருவெடுத்த ஆள்கள் காணாமற்போதல் பிரச்சினைக்குத்தற்காலிகமுடிவையேனும்ஏற்படுத்தும்

தொடர்ச்சி▼

# கால் நூற்றாண்டுக்கு முந்திய கதை....!

தொடர்ச்சி▲

எத்தனத்தில் உதயனின் பங்களிப்பும் – உதயன் சார்பில் எனது ஈடுபாடும் – கணிசமாக இருந்தது என்பதைக் குறிப்பிடுவதில் திருப்தியடைகின்றேன்.

வேறு வலிமையான ஊடகங்கள் அன்று யாழ். குடாநாட்டில் காலூன்றிச் செயற்படாத நிலையில் – செயற்படமுடியாத நிலையில் – "உதயன்" மூலமும் பி.பி.ஸி. தமிழோசையின் யாழ்ப்பாணச் செய்தியாளர் என்ற முறையிலும் அச்சமயத்தில் மிகப் பயங்கரமாக உருவெடுத்திருந்த காணாமற்போவோர் பற்றிய பிரச்சினையை வெளியுலகுக்குக் கொண்டு வந்து, சர்வதேச மட்டத்திலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தும் காத்திரமான நடவடிக்கையை எனது மனதுக்குத் திருப்தி தரும் அளவில் நான் ஆற்றினேன் என்று கருதுகிறேன் .

செம்மணிப் புதைகுழிகள், அந்தப் புதைகுழிகளில் இருந்து ஓரிரு டசின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டமை, மாணவிகிருஷாந்திகுமாரசாமி, அவரது தாயார் மற்றும் அயலவரின் சடலங்கள் செம்மணி வீதியோரப் புதைகுழிகளிலிருந்து எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்டமை, யாழ். துரையப்பா விளையாட்டரங்கத்தில் மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டமை போன்ற பல விடயங்கள் தொடர்பான செய்திகளை பி.பி.ஸி. தமிழோசையில் நீங்கள் எனது குரலில் செவி மடுத்த ஞாபகம் இருக்கக்கூடும்.

பிற வேலைகள் காரணமாக அந்த பி.பி.ஸி. தமிழோசைக்கு யாழ். செய்திகளை வழங்கும் பொறுப்பிலிருந்து நான் ஒதுங்கிக் கொள்ள அந்தப் பணியை ஏற்றுக் கொண்டு துடிப்புடன் செயற்பட்டவர் எனது நண்பர் மயில்வாகனம் நிமலராஜன். 2000 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் காலத்தில் யாழ்ப்பாணத்தில் தனது வீட்டிலிருந்து பி.பி.ஸி.யின் தமிழோசைக்குத் தனது குரலில் செய்தியை வழங்கிவிட்டு அதனை பி.பி.ஸி. அஞ்சல் செய்வதைக் கேட்பதற்காக வீட்டில் காத்திருந்த நிமலராஜன் கொலையாளிகளால் சுட்டும்வெட்டியும் கொடூரமாகக் கொல்லப்பட்டார்.



# வரவு செலவுத்திட்டத்தில் அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியம் இம்மாதம் முதல் வழங்கப்படும்

வரவு செலவுத்திட்டத்தில் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ஓய்வூதியம் இம்மாதம் முதல் வழங்கப்படும் என பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஓய்வுபெற்ற 5 லட்சத்திற்கும் அதிக அரச ஊழியர்கள் அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியத்திற்கு தகுதி பெற்றுள்ளனர் என அமைச்சர் கலாநிதி சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

# சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்கு வந்து சட்டவிரோத தொழில் செய்யும் இஸ்ரேலியர்கள்

சுற்றுலாப் பயணிகளாக நாட்டிற்கு வருகை தந்துள்ள சில இஸ்ரேலிய நாட்டவர்கள், கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளில், சட்டவிரோதமான தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்கள் போதைப்பொருள் விற்பனையிலும் ஈடுபடுகின்றனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை தொடர்பில் நன்கறிந்த, சில உள்நாட்டு மக்களுடன் மேற்படி இஸ்ரேலிய நாட்டவர்கள், தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரிவில் உள்ள அருகம்பை, கோமாரி மற்றும் பானம போன்ற பகுதிகளிலிருந்து இது போன்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளின் ஊடாக, சுற்றுலாத்துறைக்கான வருமானம் இழக்கப்படுகிறது. வட்ஸ்-அப் மற்றும் பேஸ்புக் போன்ற சமூக ஊடகங்கள் ஊடாக, ஒழுங்கமைக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.






# 2 ஆண்டுகள் பின்னோக்கி சென்ற ஈரானின் அணுவாயுதத் திட்டம்

கடந்த 11 நாள்களுக்கு முன்னர் அமெரிக்கா நடத்திய தாக்குதலில் ஈரானின் அணுவாயுத திட்டம் இரண்டு ஆண்டுகள் வரை பின்னோக்கி சென்றுள்ளதாக பென்டகன் அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் தாக்குதலின் மதிப்பீடு தொடர்பான அந்த நாட்டுத் தேசிய புலனாய்வு பிரிவின் ஆவணம் ஒன்று முன்னதாக கசிந்திருந்தது.

இதன்படி, அமெரிக்காவின் தாக்குதலுக்கு முன்னதாக ஈரான் தமது செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை வேறு பகுதிக்கு நகர்த்தியிருக்கலாம் எனவும், அமெரிக்காவின் தாக்குதல் ஈரானின் அணுவாயுத திட்டத்தை முழுமையாகச் சேதப்படுத்தவில்லை எனவும் தகவல் வெளியாகியிருந்தது.

எவ்வாறாயினும், நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் தாக்குதல் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்திய பென்டகனின் பேச்சாளர் ஷோன் பார்னெல், ஈரானின் அணுவாயுதத் திட்டம் இரண்டு ஆண்டுகள் பின்னோக்கி சென்றுள்ளதாக அறிவித்துள்ளார்.

புலனாய்வுத்துறை தகவல்களின் அடிப்படையில் இந்த விடயத்தை வெளிப்படுத்துவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 22 ஆம் திகதி ஈரானின் 3 அணுவாயுத திட்டங்களை இலக்கு வைத்து அமெரிக்கா தாக்குதல்களை நடத்தியிருந்தது.

இந்தநிலையில், குறித்த தாக்குதலின் பாதிப்பை மதிப்பிடுவதற்குப் புலனாய்வு பிரிவுக்கு சில நாட்கள் தேவைப்படும் எனவும் பென்டகனின் பேச்சாளர் ஷோன் பார்னெல் தெரிவித்துள்ளார்.

# மருத்துவ உதவிக்கான நிதியைக் குறைக்கும் ட்ரம்ப் யோசனையை விமர்சித்தார் ஒபாமா

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் வரி குறைப்பு யோசனைக்குப் பின்பு, நிதி ஆதாரத்தைத் திரட்ட, மருத்துவ உதவிக்கான நிதியைக் குறைக்கும் யோசனையை ட்ரம்ப் அரசு கொண்டு வந்துள்ளது.

இந்த யோசனையை விமர்சித்து, அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமா தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதன்படி, மருத்துவ உதவிக்கான நிதியைக் குறைத்து, மலிவு விலை பராமரிப்புச் சட்டத்தை பலவீனப்படுத்தும் யோசனையை நிறைவேற்ற, ட்ரம்ப்பின் குடியரசுக் கட்சியினர் விரைந்து வருவதால், 1.6 கோடி அமெரிக்கர்கள் தங்கள் சுகாதாரப் பாதுகாப்பை இழக்கும் அபாயத்தில் உள்ளனர்.

மேலும், ட்ரம்ப்பின் இந்த யோசனை நிறைவேறினால், உழைக்கும் வர்க்க குடும்பங்களின் எதிர்கால தலைமுறைகளைக் கடுமையாகப் பாதிக்கும்.

அதனால், இன்றே உங்கள் பிரதிநிதியை அழைத்து, இந்த யோசனைக்கு எதிராக வாக்களிக்கச் சொல்லுங்கள் என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமா தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



# இந்த ஆண்டில் 9,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்யும் மைக்ரோசாப்ட்




தொழில்நுட்ப நிறுவனமான மைக்ரோசாப்ட் இந்த ஆண்டு 9,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்யவுள்ளதாக உறுதிப்படுத்தியுள்ளது.

மைக்ரோசாப்ட் நிறுவனம் செயற்கை நுண்ணறிவில் அதிக அளவில் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது.

மேலும் செயற்கை நுண்ணறிவு மாதிரிகளைப் பயிற்றுவிப்பதற்காக மிகப்பெரிய தரவு மையங்களில் 80 பில்லியன் டொலர் செலவிடுகிறது.

இந்நிலையில், இந்த குறைப்புகள் மைக்ரோசாப்டின் 228,000 இற்கும் மேற்பட்ட உலகளாவிய பணியாளர்களில் 4 வீதத்திற்கும் சமமாக இருக்கும்.

2025 ஆம் ஆண்டில் இதுவரை மூன்று சுற்று பணிநீக்கங்களைத் மைக்ரோசாப்ட் தொடங்கியுள்ளது.

# 2 ஆம் உலகப் போருக்குப் பின்னரான உலக ஒழுங்கு வேகமாக மாறி வருகிறது

## கானா நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி உரை

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உருவாக்கப்பட்ட உலக ஒழுங்கு வேகமாக மாறி வருகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தியாவில் ஜனநாயகம் என்பது வெறும் ஓர் அமைப்பு அல்ல் அது நமது அடிப்படை மதிப்புகளின் ஒரு பகுதி என்று அவர் குறிப்பிட்டார்.

இரண்டு நாள் பயணமாக நேற்று முன்தினம் கானா சென்ற பிரதமர் நரேந்திர மோடி நேற்று அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தினார். நாடாளுமன்ற சபாநாயகர் அல்பன் கிங்ஸ்ஃபோர்ட் சுமனா பாக்பின், இந்த சிறப்புக் கூட்டத்தைக் கூட்டினார். இதில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், சிறப்பு விருந்தினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பிரதமர் மோடி தனது உரையில்,

“இந்த மதிப்புமிக்க சபையில் உரையாற்றுவதில் மிகவும் பெருமைப்படுகிறேன். ஜனநாயகம், கண்ணியம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் கானாவில் இருப்பது ஒரு பாக்கியம்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயகத்தின் பிரதிநிதியாக, 140 கோடி இந்தியர்களின் நல்லெண்ணத்தையும் வாழ்த்துகளையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தைரியத்துடன் பிரகாசிக்கும், வரலாற்றைத் தாண்டி உயரும், ஒவ்வொரு சவாலையும் கண்ணியத்துடனும் கருணையுடனும் எதிர்கொள்ளும் ஒரு தேசமாக கானா விளங்குகிறது. கானாவின் ஜனநாயக லட்சியங்கள், அனைவரையும் உள்ளடக்கிய முன்னேற்றம் ஆகியவை முழு ஆபிரிக்க கண்டத்துக்கும் உத்வேகத்தை அளித்து வருகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை, ஜனநாயகம் என்பது வெறும் ஓர் அமைப்பு அல்ல. அது நமது அடிப்படை மதிப்புகளின் ஒரு பகுதி. உலகின் பழமையான வேதங்களில் ஒன்றான ரிக் வேதம், ‘எல்லா திசைகளிலிருந்தும் நல்ல எண்ணங்கள் நமக்கு வரட்டும்’ என்று கூறுகிறது. பல்வேறு கருத்துகளை வெளிப்படையான முறையில் நோக்கும் தன்மைதான் ஜனநாயகத்தின் மையக்கரு.

இந்தியாவில் 2,500 இற்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் உள்ளன. நான் மீண்டும் சொல்கிறேன். 2,500 அரசியல் கட்சிகள், வெவ்வேறு மாநிலங்களை ஆளும் 20 வெவ்வேறு கட்சிகள், 22 அதிகாரபூர்வ மொழிகள், ஆயிரக்கணக்கான பேச்சு வழக்கு என பன்முகத்தன்மை கொண்ட நாடாக எங்கள் இந்தியா உள்ளது. வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வரும் மக்கள் எப்போதும் திறந்த மனதுடன் வரவேற்கப்படுவதற்கு இத்தகைய பன்முகத்தன்மையே காரணம். இதே உணர்வு இந்தியர்கள் எங்கு சென்றாலும் அவர்களிடம் இருக்கிறது. கானாவில் கூட, அவர்கள் தேநீரில் சர்க்கரையைப் போல சமூகத்தில் கலந்திருக்கிறார்கள்.” என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கானாவின் தேசிய விருதான “தி ஒபீசர் ஒஃப் தி ஆர்டர் ஒ ஃப் தி ஸ்டார் ஒஃப் கானா”, பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.



விருதை பெற்றுக்கொண்டு நன்றி தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி, “கானாவின் தேசிய விருதான “தி ஒபீசர் ஒஃப் தி ஆர்டர் ஒ ஃப் தி ஸ்டார் ஒஃப் கானா” விருது கானா ஜனாதிபதியால் வழங்கப்பட்டதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். கானா ஜனாதிபதி மகாமாவுக்கும், கானா அரசுக்கும் மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 140 கோடி இந்தியர்களின் சார்பாக இந்த கௌரவத்தை நான் பணிவுடன் ஏற்றுக்கொள்கிறேன்.

நமது இளைஞர்களின் எதிர்பார்ப்புகள், அவர்களின் நம்பிக்கைக்குரிய எதிர்காலம், நமது வளமான கலாச்சார பன்முகத்தன்மை, மரபுகள், இந்தியாவிற்கும் கானாவிற்கும் இடையிலான நீடித்த வரலாற்று பிணைப்புகள் ஆகியவற்றுக்கு இந்த கௌரவத்தை நான் அர்ப்பணிக்கிறேன்.” என்று தெரிவித்துள்ளார்.





# இமாச்சலப் பிரதேசத்தில் கனமழை; இதுவரை 63 பேர் உயிரிழந்தனர்

## மீட்புப் பணிகள் தீவிரம்

இமாச்சலப் பிரதேசத்தில் கனமழை மற்றும் நிலச்சரிவு காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 63 ஆக அதிகரித்துள்ளது. 40 பேரை காணவில்லை என்றும் மாநில அரசு தெரிவித்துள்ளது. மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

மேகவெடிப்பு காரணமாக இமாச்சப் பிரதேசத்தில் கடந்த 10 நாள்களுக்கும் மேலாக கனமழை பெய்து வருகிறது. இதனால், பல இடங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில், சிம்லாவில் செய்தியாளர்களிடம் பேசிய முதல்வரின் ஊடக ஆலோசகர் நரேஷ் சவுகான், “மேக வெடிப்புகள் மற்றும் கனமழை பேரிடர்களால் 63 பேர் உயிரிழந்துள்ளனர். 40 பேர் காணாமல் போயுள்ளனர்” எனத் தெரிவித்தார்.



# குருநாகல் வதுராகல பகுதியில் இடம்பெற்ற பாரிய தீ விபத்து!

**(உடப்பு க.மகாதேவன்)**

குருநாகல் – கொழும்பு வீதியிலுள்ள வதுராகல பகுதியில் நேற்றுப் பிற்பகல் பாரிய தீ விபத்தொன்று ஏற்பட்டதாக குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் ஒரு கட்டடத் தொகுதியில் உள்ள மோட்டார் உதிரிப்பாகக் களஞ்சியத்திலேயே பாரிய தீ விபத்து நேர்ந்து பலத்த சேதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.






# கானகப் பாதையில் பைலா கும்மாளம் தேவையா? பாதயாத்திரீகர் திருச்செல்வத்தின் ஆதங்கம் இது!

## கதிர்காமத்துக்கான கானகப் பாதை இன்று மூடப்படுகின்றது



( காரைதீவு நிருபர் சகா)

கதிர்காம பாதயாத்திரையில் பல முருக பக்தர்களுக்கு மன உளைச்சலையும் விரக்தியையும் ஏற்படுத்திய அருவருக்க தக்க செயல்கள் இம்முறை நடைபெற்றுள்ளன. எதிர்காலத்தில் இவை களையப்பட வேண்டும்.

– இவ்வாறு வரலாற்று ஆய்வாளர் கலாநிதி என்.கே.எஸ்.திருச்செல்வம் தமது கதிர்காம பாதயாத்திரை அனுபவத்தை விவரிக்கிறார்.

இன்று வெள்ளிக்கிழமை கதிர்காமத்திற்கான கானகப் பாதை மூடப்படும். கடந்த 15 நாள்களாக இப் பாதை திறந்திருந்தது. சுமார் 40 ஆயிரம் அடியார்கள் கானகப் பயணத்த. இம்முறை மேற்கொண்டிருந்தார்கள்.

அவர் அதுபற்றி மேலும் தெரிவிக்கையில் –

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான, சிறப்பு மிக்க, பக்தி பூர்வமான பாத யாத்திரையில் உலகின் பல பாகங்களிலும் இருந்து பல முருக பக்தர்கள் விரதமாகவும் இறை நாமங்களை உச்சரித்தும் பக்தி சிரத்தையோடு கலந்து கொள்கிறார்கள்.

கானகத்தில் கந்தனை காண பல காலம் காத்திருந்து பய பக்தியுடன் பக்தர்கள் யாத்திரை மேற்கொள்கிறார்கள். ஆனால் எங்களுடைய சமயத்தில் மாத்திரம் எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லாத காரணத்தினால் கானகத்தில் ஊடுருவும் சில நபர்களாலும் சிறு குழுக்களாலும் பல பக்தர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வண்ணம் இடையூறு விளைவிக்கும் செயற்பாடுகளும் ஆங்காங்கே நடைபெற்ற வண்ணம்தான் இருக்கின்றன.

மாற்று இனத்தவர்கள், சிங்களவர்கள் – பௌத்தர்கள், வெளி நாட்டவர்கள் கூட பக்தியுடன் பாதயாத்திரையை மதித்து தலை வணங்கி "அரோகரா" என்று யாத்திரை மேற்கொள்கின்றனர். ஆனால் எங்களுடைய சிலர் கோமாளித் தனமாக பைலா பாடல்கள், சினிமா பாடல்கள், கும்மாளம், இசை கச்சேரி என பக்தர்களை தொந்தரவு செய்யும் வகையில் இரவு பகல் பாராமல் அடியார்களின் பக்திக்குரிய யாத்திரைக்கு தொடர்ச்சியாக இடையூறு ஏற்படுத்தப் படுகின்றது. இதனால் பல அடியார்கள் வெளியில் சொல்லவும் முடியாமல் தட்டி கேட்கவும் முடியாமல் பல மன அவதிக்கு உள்ளாகிறார்கள்.

பக்தி பாடல்களும் கூட்டு பிரார்த்தனைகளும் சிறிய பஜனைகளும் இடம் பெற வேண்டிய இந்தக் காட்டு வழி பாதையில் இது போன்று இடம்பெறும் எல்லை மீறிய பைலா இசை குதூகலங்கள் நிச்சயமாக நிறுத்தப்படல் வேண்டும் என பக்தர்கள் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

எதிர்வரும் காலங்களில் உரிய நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் மேற்கொண்டு இது போன்ற சமய விழுமிய கலாசார சீர்கேடுகளை விளைவிக்கும் நபர்களுக்கு தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்துகிறார்கள்.

எமது கலாசார பண்பாட்டு விழுமியங்களை கட்டி காக்க வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமை ஆகும். – என்றார்.

# மஸ்கெலியாவில் 5 மாத சிசு சளி அடைப்பு ஏற்பட்டு சாவு

(ரி.பெருமாள்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள புரவுன்சீக் தோட்ட மோட்டீங்ஹேம் பிரிவில் சளி அடைத்து 5 மாத சிசு மரணமடைந்துள்ளது

நேற்று முன்தினம் மாலை சிசுக்கு சளியால் சுவாச அடைப்பு ஏற்பட்டதன் காரணமாக பெற்றோர் ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தி சுமார் ஆறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலைக்கு கொண்டு வந்த வேலையில் வைத்திய பரிசோதனை மேற்கொண்ட போது சிசு மரணம் அடைந்த நிலையில் இருந்தது என்பது தெரிய வந்தது.

சிசுவின் சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல பட்டு அங்கு உடற் கூற்று பரிசோதனை மேற் கொள்ள பட்ட பின்னர் உடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கபட்டது.

புரவுன்சீக தோட்ட மோட்டிங்ஹேம் பிரிவிற்கு செல்லும் வீதி சுமார் இரண்டு கிலோ மீட்டர் மிகவும் பாரிய குண்டும் குழியுமாக உள்ள நிலையில் கர்ப்பிணி பெண்கள் மற்றும் குழந்தைகள், நோயாளிகள், பாடசாலை மாணவர்கள் பாரிய இன்னலுக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளது எனவும், இந்த இரண்டு கிலோ மீட்டர் வீதியை தோட்ட நிர்வாகம் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செப்பனிட்டுத் தர வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இன்றைய ராசி பலன்கள் - 04.07.2025

## மேஷம்

இன்று சவால்களை உற்சாகமாக கையாள வேண்டும். உங்கள் பொறுமையை சோதிக்கும் சூழ்நிலை உருவாகும். மனக் குழப்பம் காரணமாக சரியான முடிவெடுக்க இயலாத நிலை இருக்கும்.

பணியிடத்தில் திறமையாக செயல்பட முடியாது. இன்று பணியில் வளர்ச்சி காண கூடுதல் முயற்சி எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்பட நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்தப் போக்கை மேற்கொள்வதன் மூலம் திருப்தி நிலவும்.

நிதிநிலைமையில் வளர்ச்சி காணப்படாது. நிதியில் ஸ்திரத்தன்மையும் காணப்படாது.

இன்று பாதுகாப்பின்மை உணர்வும் பதற்றமும் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.

## ரிஷபம்

இன்று சற்று சுமாரன நாளாக இருக்கும். இன்று நற்பயன் காண பல விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். உங்கள் இலக்குகளை எளிதாக அடைவது இன்று சற்று கடினம்.

பணியிடத்தில் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் முறையாக திட்டமிட வேண்டும். உங்கள் பணிகளை விவேகத்துடன் கையாள வேண்டும்.

உங்களிடம் குழப்பமான எண்ணங்கள் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் தேவையற்ற விவாதங்கள் ஏற்பட வாயுப்புள்ளது. பொறுமையை வளர்த்துக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை திருப்திகமாக இருக்காது. அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இது உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி பற்றிய செலவாக இருக்கும்.

## மிதுனம்

இன்று நன்மை விளையும் நாள். அதிர்ஷ்டகரமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று எதிர்பாரத பணவரவு காணப்படும்.

உங்கள் பணிகளை முடிப்பதில் வெற்றி பெறுவீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். பிறரின் நன்மதிப்பை பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். இதனால் உறவில் திருப்தி காணப்படும்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் நண்பர்கள் உங்களுக்கு பணம் சார்ந்த உதவி புரிவார்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். என்றாலும் மருத்துவ ஆலோசனை மேற்கொள்வது நல்லது.

## கடகம்

இன்று உங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். இன்று புதிய நண்பர்கள் மற்றும் புதிய தொடர்புகளைப் பெறுவீர்கள். உங்கள் போக்கில் உற்சாகமான அணுகுமுறை காணப்படும்.

உங்கள் பணியில் திருப்தி காண்பீர்கள். உங்கள் பணியை திறமையைப் பயன்படுத்தி நல்ல தரத்துடன் முடித்துக் கொடுப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நகைச்சுவையான உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இந்த அணுகுமுறை உங்கள் துணையை திருப்திப்படுத்தும்.

இன்று போதிய பண வரவு காணப்படும். உங்களால் பணம் சேமிக்க இயலும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்திற்கு தேவையான தைரியம் மற்றும் ஆற்றல் உங்களிடம் காணப்படும்.

## சிம்மம்

இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் முயற்சிகளில் வெற்றி காண நீங்கள் சிறப்பாக திட்டமிட வேண்டும். இன்று அதிர்ஷ்டம் காணப்படாது.

உங்கள் பணியை திறம்பட ஆற்ற நீங்கள் கவனம் செலுத்தவேண்டும். நீங்கள் விரும்பிய பலனை அடைய முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அதிருப்தி மற்றும் அசௌகரியம் உணர்வீர்கள். உங்களின் வேறுபாடான அணுகுமுறை உங்கள் துணையுடனான உறவை பாதிக்கும்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் காணப்படாது. நீங்கள் பணப் பரிவர்த்தனைக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## கன்னி

இன்று நீங்கள் விரும்பிய பலனை அடைய பொறுமை அவசியம். சில விஷயங்களில் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். நற்பலன்களைக் காண திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

உங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்களின் ஏமாற்ற உணர்வு காரணமாக முரண்பாடு காணப்படும். உங்கள் துணையிடம் இதனை வெளிப்படுத்தாமல் கவனமாக இருங்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் செலவுகள் இன்று உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணத்தை சாதுர்யமாக செலவிட வேண்டும்.

## துலாம்

இன்று சமூகமான பலன்கள் கிடைக்கும் நாள். என்றாலும் உறுதியான முயற்சி மேற்கொள்ள வேண்டும். வெற்றி உங்களை நாடி வரும்.

உங்களின் அபாரமான செயல் திறமைக்கு நீங்கள் பாராட்டைப் பெறலாம். உங்கள் தனித்த திறமைகள் உங்களை சிறப்பாக செயல்பட வைக்கும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் நடந்து கொள்வீர்கள்.இதனால் உறவில் பரஸ்பரம் அன்பு மலரும்.

நிதி நிலைமை ஸ்திரமாக சிறப்பாக காணப்படும். உங்கள் சேமிப்பை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று சிறப்பான ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்கள் மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## விருச்சிகம்

இன்று சாதகமான நாளாக இருக்காது. இன்று நற்பலன்களைக் காண மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். சில சமயங்களில் நீங்கள் பொறுமை இழப்பீர்கள். அமைதியாகவும் ஓய்வாகவும் இருப்பது சிறந்தது.

குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் குழப்பமான உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். ஆரோக்கியமான உறவை பராமரிக்க இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று பணவரவிற்கான சாத்தியமான நாள் அல்ல. நீங்கள் தேவையின்றி சில விஷயங்களுக்காக பணத்தை செலவு செய்ய நேரும்.

உங்கள் தாயின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.07.2025




இன்று துடிப்பான நாளாக இருக்காது. மனக் குழப்பங்கள் காணப்படும். பிரார்த்தனை மற்றும் இசை போன்ற நிகழ்சிகள் மன ஆறுதலை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். முறையாக திட்டமிட்டு செயலாற்றுவதன் மூலம் நன்மை விளையும்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது. இது உறவின் ஸ்திரத்தன்மையைப் பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இதனால் உங்களுக்குக் கவலை ஏற்படும்.

இனிப்பு உணவு வகைகளை தவிர்க்கவும். இதனால் பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி பெறுவதற்கான ஆற்றலும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். அனைத்து விதத்திலும் செழுமை காணப்படும்.

புதிய வாய்ப்புகள் கிடைப்பதற்கான சாத்தியம் உள்ளது. இதன் காரணமாக திருப்தியான மனநிலை காணப்படும். உங்கள் பணிகளை விரும்பி அனுபவிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்வான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். மகிழ்ச்சியுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக உள்ளது. நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் செயல்களில் யதார்த்தமாகவும் முறையாகவும் இருக்க வேண்டும். உங்கள் செயல்களை கையாள்வதில் சில தடைகள் காணப்படும். இன்றைய நாள் சராசரி பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் வெற்றி காண கடும் முயற்சி செய்ய வேண்டும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனால் இருவரிடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். இதனை தவிர்க்க முயற்சி செய்யவும்.

நிதி வளர்ச்சி இன்று சாத்தியமில்லை. உங்கள் குடும்பத்துக்காகக் கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் செயல்களில் வெற்றி காண்பீர்கள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று உங்களுக்குச் சாதகமான நாள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். நற்பலன்கள் கிட்டும். பணி குறித்து உங்கள் மனதில் திருப்தி காணப்படும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். உங்கள் உணர்வுகளை வெளிப்படையாக பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி ஸ்திரமாக காணப்படும். எதிர்பாரத பண வரவு காணப்படும்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# வவுனியாவில் வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் மற்றும் குளங்களை விடுவிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தகவல்

(கி.வசந்தன்)

வவுனியாவில் கூகுள் வரைபடம் மூலம் வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட 25 ஆயிரம் ஏக்கர் காணிகள் மற்றும் குளங்களை விடுவிப்பதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளை முன்னெடுத்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இத்தகவலை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியா மாவட்டத்தில் வாழ்கின்ற இடம்பெயர்ந்த மக்களுக்கும், காணியற்ற மக்களுக்கும் புதிதாக திருமணம் முடித்து காணிகள் அற்ற குடும்பங்களினதும் நன்மை கருதி அவர்களுக்கான ஒரு தீர்வினை வழங்குவதற்கான நடவடிக்கையினை தேசியமக்கள் சக்தி அரசு எடுத்துள்ளது.

அந்தவகையில் கடந்த 2012 ஆம் ஆண்டில் வவுனியா மாவட்டத்தில் கூகுள் வரைபடத்தின் மூலம் வனவளத் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட அனைத்து காணிகளையும் விடுவிப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.



குறிப்பாக இந்த மாவட்டத்தில் அண்ணளவாக 25 ஆயிரம் ஏக்கர் காணிகள் அவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்திலும் வனவளத்திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 52 ஆயிரம் ஏக்கர் காணிகள் உள்ளது. அவை அனைத்தையும் தேசியமக்கள் சக்தி அரசாங்கம் விரைவில் விடுவிக்கவுள்ளது.

அந்த காணிகளை அதன் உரிமையாளர்களுக்கும், காணிகள் அற்ற மக்களுக்கும் வழங்குவதற்கான துரித நடவடிக்கையினை நாம் மேற்கொண்டுள்ளோம். அத்துடன் வவுனியாவில் 849 குளங்கள் உள்ளன. அதில் 221 குளங்கள் வனவள திணைக்களத்தின் எலைக்குள் அமைந்துள்ளன. இவற்றில் தற்போது 44 குளங்களை உடனடியாக விடுவித்து அவற்றை மீளவும் புணர்நிர்மானம் செய்து மக்கள் பயன்பாட்டிற்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.

அத்துடன்காடுமண்டிகாணப்படுகின்ற ஏனைய 149 குளங்களை மீட்டு அவற்றை சுத்தப்படுத்தி மக்கள் பாவனைக்கு விடுவிப்பதற்கான நடவடிக்கை விரைவாக முன்னெடுக்கப்படும். இந்த வருடத்திற்குள் அந்த பணிகள் ஆரம்பிக்கப்படும்.

இந்த மாவட்டத்தில் ஆறு பெரிய நீர்ப்பாசனக் குளங்கள் உள்ளன. அவற்றை புனரமைப்பதற்காக 780 மில்லியன் ரூபா தேவையாகவுள்ளது. அந்த நிதியை அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தில் ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் காணி விடுவிப்பின் முதற்கட்டமாக நெடுங்கேணியில் வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட காணிகளில் விடுவிக்கப்படவேண்டிய இடங்களை அடையாளப்படுத்தும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தோம். வவுனியா வடக்கு பிரதேச செயலாளர், வனவளதிணைக்கள அதிகாரிகள் பொதுமக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

எதிர்வரும் காலங்களில் வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்திக்காக உலக வங்கியானது ஒரு பில்லியன் டொலர் நிதியை வழங்கவுள்ளது. இதன் மூலம் வடகிழக்கு மக்களின் பொருளாதாரத்தை வளம்பெறசெய்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவோம். – எனத் தெரிவித்தார்.